*Editor's Note*

Please address all communication for the English pages to **The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 O Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 9TH MAY, 1980 No. 19

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.

*Apply to:*
**The Manager,**
'Morning Star',
VADDUKODDAI.

## The Fort Church to be Used Again

After a lapse of several years, we are happy to report that the Fort Church will be used again by the Jaffna Christian Union for United Services from time to time. The Jaffna Christian Union will hold the first Service on Sunday, the 18th of May at 5·00 p. m. to mark Asia Sunday.

It will be a Holy Communion Service at which the Bishop of the J. D., C. S. I. and other leaders of denominations will officiate. The Rev. S. Wesley Ariarajah will be the preacher.

## Service of Thanksgiving

Alice Annaratnam Alfred, mother of Rev. Sevak Sam Alfred, was remembered at a Service of Thanksgiving at the Christa Seva Ashram on Monday, 5th of May at 4-30 p. m.

The Sevak led the Service. Two young people of the Ashram, who had come under the influence of Mrs. Annaratnam Alfred, participated at the Service. Sooriyakumar, who is now a student at the Theological College at Madurai, read the Psalms while another of her favourite Ashram boys read the first Bible Lessons.

Children of the family read the other Bible Lessons. Three Ministers of the J. D. C. S. I., who were close to the mother, participated in the Service.

Rev. K. S. Jeyasingham paid the tribute. Rev. D. R. Ampalavanar preached the Sermon while the Rev. N. W. G. Sugunarajah led the Litany of Praise.

On behalf of the Navaly Church, Mr. C. J. Eliathamby referred to the impress which Mrs. Annaratnam Alfred, left on the life of the Church.

The Service ended with Benediction pronounced by the Rt. Rev. S. Kulandran.

All those who attended the Service were entertained to tea by Rev. Sevak Sam Alfred and members of the family.

## Well Known Evangelist Passes Away

Mr. Paul Kadambavanam, the well-known Tamil evangelist, preacher and writer passed away at the ripe age of 91 at the home of his son Mr. Thamby Kadambavanam, Director of the Macphail Centre for Fine Arts, Madras Christian College, Tambaram. The funeral took place at Tambaram on the 8th March, 1980. The late Mr. Kadambavanam has visited Jaffna and was a special friend of the Ashram. Mr. Kadambavanam (junior) would like to collect information from friends in Jaffna and Sri Lanka on his father and would appreciate response from friends here.

*J. D. C. S. I. Clergy*

## FAREWELL TO Rev. & Mrs. S. T. ASEERVATHAM

The Presbyters and Workers of the J D C S I gathered at the Parish Hall at Manipay on Wednesday (30·4·80) to accord a Farewell to Rev. S. T. Aseervatham and Mrs. Aseervatham on the eve of their retirement from active service. Associated with the members of clergy were their wives.

Rev. K. S. Jeyasingam in his address of Appreciation of the services rendered to the Diocese by Rev. Aseervatham, spoke of the great Christian heritage to which he was an heir. The training he had at Jaffna College and particularly his association with the Jaffna College YMCA stood him in good stead as a Minister of the Church.

His 'parish consciousness' and his evangelistic zeal marked him out as a Minister whose life and example his colleagues were eager to follow.

Mrs. Sam Thampoe speaking of the contribution Mrs. Aseervatham made to the life of the Church and community said that Gnani Acca was one who had a vast reservoir of power to meet the stress of a crowded life which included many hours in school and many hours after school in parish work. She was a pioneer in youth and children's work and into the activities of the REB of the Jaffna Diocese, she put all her talents and energy to make it a worthy instrument to ennoble the lives of the young. As a Pastor's wife for 44 years, she had a record of Parish work which few workers' wives could equal.

The Rt. Rev. D. J. Ambalavanar said that Rev. S. T. Aseervatham belonged to the very first batch of Ministers of the Church who entered the Ministry after their B. D. degree. Fortynine years in the Ministry of the Church of one of the members of clergy was a record for which we should offer thanksgiving to God. Rev. and Mrs. Aseervatham were an ideal clergy couple. Mrs. Aseervatham was able to set an example to workers' wives on how two different kinds of Christian work could be done to the mutual enrichment of both.

The meeting concluded with prayer and benediction by the Bishop.

The Rev. and Mrs. S. T. Aseervatham have left for Colombo *en route* to England and Australia where they hope to spend some months with their sons.

## Identity Cards

All persons above 18 years are required in Sri Lanka to obtain identity cards which from 1-5-80 will cost Rs. 3/- for every person.

The Fee for late applications (those cards for which applications are made after 30-4-80) will be Rs. 10/-.

## New AL Requirements

*The New AL Examination* which will be held for the first time in August 1981, will be for candidates who have passed the G. C. E. (OL) Examination of December 1979 and have the necessary qualifications for the courses they have chosen.

A student who wishes to follow a *Commerce* course, for instance, should have a credit pass in that subject at the OL and also an ordinary pass in Mathematics.

An *Arts* student should have a credit pass in Social Studies and a *Science* student should have passed in either Mathematics or Science with a credit pass in the other subject.

*Home Economics* students should have passed in Home Science, Handwork or Science, and *Agriculture students* should have a pass in Science and credit in Agriculture. Students wishing to do *aesthetic studies* should have obtained a credit in Art, Music or dancing.

The basic requirement for entry to the AL class is a Pass in Five subjects with the First Language and *two* credits. The sixth subject can be completed at the subsequent OL Examination in December.

*OBITUARY*

## Mr. Luther Selvarajah

The tragic death of Luther Selvarajah (50), Regional Manager of the I. D. C. (Northern Region), almost immediately after participating in a Tennis Tournament in Jaffna, came as rude shock to his wife and the members of his family.

Selvarajah was on the Staff of the Undergraduate Department of Jaffna College and left the Department to join the I. D. B. soon after the take-over of the Undergraduate Section by the University as part of the Jaffna Campus.

Few people delighted in placing their time and energies, whenever available, at the disposal of their friends, as Selvarajah did. The milling crowds that attended his last rites were evidence of the large place he held in the hearts of his friends and colleagues.

The Funeral Service was held at his residence at Vannarponnai. The officiating priests were Rev. S. T. Aseervatham, Rev. K. S. Jeyasingham and Rev. Sam Alfred. The Rt. Rev. D. J. Ambalavanar preached the Sermon and the Rt. Rev. S. Kulandran gave the tribute.

The remains were interred at the Erlalai South Church Burial grounds.

## ASIA SUNDAY SERVICE

### FORT CHURCH, JAFFNA

A
United Holy Communion Service under the auspices of the Jaffna Christian Union will take place at the Fort Church, Jaffna
**on Sunday, the 18th of May at 5-00 p. m.**

*Preacher*:
THE REV. S. WESLEY ARIARAJAH

*All are invited.*

**The Rev. Joe Sarvananthan,**
*Secretary, Jaffna Christian Union.*

*WEDDING*

### St. John's Church, Chundikuli

Dr. A. Arulrajan, son of the late Mr. S. Arumainayagam, a former Headmaster of the JDCSI and Mrs. Arumainayagam of Tellippalai, led to the altar Miss Thayalini Lyman, daughter of Mr. and Mrs. A. T. Lyman of Fourth Cross Street, Jaffna, on Monday, April 28th at 4-30 p. m.

Rev. Joe Sarvanandan, Vicar of St. John's Church officiated, assisted by Rev. Isaiah John. Rev. K. S. Jeyasingam, Presbyter of the JDCSI Church at Chavakachcheri, preached the homily.

A Reception was held at Trimmer Hall, Jaffna.

*LETTER TO THE EDITOR*

I feel beholden to congratulate you on the forthright and explicit Editorial which you have so boldly published in the "Morning Star" of the 25th April, 1980.

Denominationalism and its proliferation unfortunately stand in the way of the Church fulfilling this important mission. As a leader of the Presbyterian Church in Kenya, put it recently, "we duplicate Christian Service and waste our meagre financial and human resources in the guise of giving an Anglican, or a Roman Catholic, or a Methodist witness".

In fact, I am myself preparing a memorandum on this subject and am indeed thankful to you for taking up this subject through your Editorial.

**Rev. A. C. Thambyrajah**

## *IN BRIEF ............*

- *The Sansoni Report* on the communal disturbances of August, 1977 will soon be handed over to the President. The Commission was appointed on November 11, 1977 and commenced its sittings, first in Jaffna on 2·2·1978. Besides Jaffna, the Commission has sittings in Colombo, Kandy and Anuradhapura. It recorded the evidence of 975 witnesses.

# உதயதாரகை
# UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

நாம் உற்சாகமாவே இருப்போம். தாங்கமுடியாத துரதிர்ஷ்டம் என்று நாம் எதிர்பார்க்கும் எத்தனையோ சங்கதிகள் நிகழாமலே போய்விடுகின்றன என்பதை நினைத்து நாம் உற்சாகத்துடனேயே இருப்போம்.

— லொவல்.


மலர் 140 ] 9 — 5 — 1980 [ இதழ் 19


## மே தினக் கூட்டங்கள்

தொழிலாளர் தினமான மே தினம் இவ்வருடமும் வெகு ஆரவாரமாக இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது மே தின ஊர்வலத்தையும் பகிரங்கக் கூட்டத்தினையும் யாழ் நகரிலும் மத்திய கல்லூரி மைதானத்திலும் நடாத்தினர். இடதுசாரிக் கட்சிகள் வெவ்வேறு இடங்களிலே நடாத்தினர். மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வெவ்வேறு இடங்களிலே மே தினக் கூட்டங்களை நடாத்தினர். கொழும்பில் ஐ தே. க, மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சிவாத கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திர — சமசமாஜக் கட்சிகள், ஜே. வி. பி முதலியன வெகு சிறப்பாக மே தினக் கூட்டங்களை நடாத்தினர் மே தினம் இன்று தொழிலாளர் தினமாக அன்றி, ஒவ்வொரு கட்சியினதும் வலிமையை நாட்டுக்கு அறிவிக்கும் விழாவாக மாறிவிட்டது முக்கியமான அரசியல் பிரச்சினைகள் யாவும் விமர்சிக்கப்படும் அரசியற் கூட்டங்களாகக் காணப்படுகின்றன.

கொழும்பிலே ஐக்கிய தேசியக் கட்சியினர் ஊர்வலத்தை நடாத்தவில்லை. நடைபெற்ற ஊர்வலங்களில் ஜே வி பி. ஊர்வலமே மிகச் சிறப்பானதும் மிக நீண்டதுமென அரசியல் அவதானிகளினலே கணிக்கப்பட்டது ஐக்கிய தேசியக் கட்சி பொருளாதாரத்துறையில் தான் சாதித்தவற்றை எடுத்து விளம்பியது. எதர்க்கட்சிகள் விலைவாசி ஏற்றம், பண வீக்கம், பாணின் விலை ஏற்றம் என்பனவற்றைப் பற்றிக் கண்டனம் தெரிவித்தன ஊர்வலங்களைப் பார்வையிட்டவர்கள் சமசமாஜக் கட்சி டாக்டர் என். எம் பெரேராவின் மரணத்தின் பின் சீரழிந்துபோய்விட்டது என்பதனைக் காணக்கூடியதாக இருந்தது என்கின்றனர். இடதுசாரி இயக்கத்தின் ஏக நாயகனுக ரோகண விஜயவீர வளர்ந்துவிட்டதனையும் இம் மே தினம் குறித்து நின்றது 1983-ல் நடைபெறும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எங்களைத்தான் சந்திக்க வேண்டும் என்று ரோகண விஜயவீர பேசியிருக்கின்றார் ஜே. வி பி. இன் துரித வளர்ச்சி அவர் கூற்றில் உண்மையைப் பொதிந்திருக்கிறது என்று எண்ணச் செய்கிறது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய நிலையையும் மே தினம் சுட்டிக்காட்டியது. தலைவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையிலான வேற்றுமைகள் மூடிவைக்க முடியாத அளவிற்கு வளர்ந்துவிட்டன வாலிபர்கள் தலைவர்களைப் பகிரங்கமாகக் கண்டிக்கத் தலைப்பட்டுவிட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு இது பெரும் பிரச்சினையாக வளரப் போகின்றது.

### ஞானியக்காவின் சாட்சி பகரும் ஆராதனை

20-4-80 ஞாயிறு காலை ஆராதனை, ஏழாலை வடக்குத் திருச்சபையில் சாட்சி பகரும் ஆராதனையாகக் கவனிக்கப்பட்டது. இவ்வாராதனை சங்கீத ஆராதனை முறையாகத் திருமதி சுகிர்தம் தயானந்தன் அவர்களினுல் நடத்தப்பட்டது. அவ்வாராதனையில் திருமதி ஞா. ஆசீர்வாதம் அம்மையார் "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்" என்ற தலைப்பில் உருக்கமாகச் சாட்சி பகர்ந்தார்கள். தான் வைத்தியசாலையில் நான்கு மாதங்களாக இருந்து, ஆண்டவரின் அன்பை அதிகமாக ருசித்துக் கொண்டாரென்பதாகவும், நோவாவின் பேழைக்குள் இருந்த காகம் போல, வீடு போவதும், வைத்தியசாலை போவதுமாக இருந்தபோதிலும், ஆண்டவர் ஆச்சரியமாகவும், அற்புதமாகவும் தன்னை வழி நடத்தினரென்றும், சத்திர சிகிச்சையின் மூலம் தனது விரல் அகற்றப்பட வேண்டுமென்று வைத்திய நிபுணர் கூறியபோதும், அவ்விதம் அகற்றப்படாமல் ஆண்டவர் தன்னை அற்புதமாகக் காத்தாரென்றும் கூறினார்கள். தனது உரைக்கு ஆதாரமாக ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 40 : 29, 31-ம் வசனங்களை எடுத்துக் கொண்டார்கள். "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்". மேலும், "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ, புதுப் பெலன் அடைந்து கழுகுகளைப்போல் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்", என்பதாக அவர்கள் கூறி தான் இன்னும் ஆண்டவருக்காகச் சேவை செய்யப் பெலனுள்ளவளாக இருக்கின்றார். என்பதாகச் சொன்னார்கள். அதன்பின் போதகரவர்களின் ஜெபத்துடனும், ஆசீர்வாதத்துடனும் ஆராதனை இனிது முடிந்தது.

பொருளாதார அபிவிருத்தியில் திருச்சபை

## கல்லாறு மீன்பிடி அபிவிருத்திச் சங்கத்தின் மகோன்னத வளர்ச்சி

கல்லாறு கிராமம் கிழக்கில் கடலாலும், மற்றைய மூன்று திசைகளிலும் மட்டக்களப்பு வாவியினுலும் சூழப்பட்ட ஒரு செழிப்பான கிராமமாகும். இக்கிராமத்தின் பெரும்பான்மையான மக்கள் மீன்பிடித் தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்டு ஜீவியம் நடத்துகின்றனர். மீன்பிடித் தொழிலில் முக்கியமான இடமாக இருந்தாலும் இம்மக்கள் பழைய முறைகளைக் கொண்டே மீன்பிடித் தொழிலைச் செய்வதால் வாழ்வில் முன்னேற்றம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

மீன்பிடித் தொழிலை நவீனமயப்படுத்துவதற்கும், மீன்பிடித் தொழிலாளர்கள், பொருளாதார, சமூக, கலாச்சார ரீதியில் முன்னேற்றம் அடையச் செய்வதற்கும் உருவாக்கப்பட்டதே கல்லாறு மீன்பிடி அபிவிருத்திச் சங்கமாகும்.

இச்சங்கம் 1978-ம் வருடம் ஆவணி மாதம் 19-ந் திகதி கல்லாறு மெதடிஸ்த திருச்சபையினுடைய முழு ஆதரவுடனும் அதன் போதகர் வண. எஸ். கே. கதிர்காமர் அவர்களது பூரணத்துவமான ஒத்துழைப்புடனும் பன்னிரண்டு (12) அங்கத்தவர்களுடன் ஆங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

### கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பும் சங்கமும் :

சங்கம் உடனடியாக அனுதரவானவர்களுக்கு ஆதரவளிக்கும் பொது ஸ்தாபனங்களுடன் கல்லாறு மெதடிஸ்த திருச்சபையின் ஒத்துழைப்புடனும், அதன் போதகரும் சங்கத் தலைவருமான வண. எஸ். கே. கதிர்காமர் ஊடாகத் தொடர்புகளைக் கொண்டது. பொது ஸ்தாபனங்களில் "கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு" உடனேயே உதவுவதற்கு முன்வந்தது. அதன்படி 45 குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு பூரணத்துவமாக அளிக்க உதவிகளைப் பணமாகத் தந்துதவியது, அத்துடன் சங்கத்திற்கான காணி வாங்குவதற்காகவும், மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்காகவும் உதவிகளைப் பூரணத்துவமாகச் செய்தது. எனவே "கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பிற்கு" தனது இதயபூர்வமான நன்றியைச் சங்கம் கூறக் கடமைப்பட்டுள்ளது.

### சங்கத்தின் கருமமாற்றல் :

கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பின் பணத்தினைக் கொண்டு மிக விரைவாகச் சங்கம் வகுத்த செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றது.

(அ) 1. வாவி மீன்பிடி :

சங்க அங்கத்தவர்களில் 21 குடும்பங்களுக்கு வாவியில் மீன்பிடிப்பதற்குரிய மீன்பிடிக் கருவிகள், தோணிகளை வட்டியில்லாக் கடனுகக் கொடுத்துத் தொழிலை ஆரம்பித்துள்ளது.

2. கடல் மீன்பிடி :

சங்க அங்கத்தவர்களில் 24 குடும்பங்களுக்குக் கடலில் மீன்பிடிப்பதற்குரிய மீன்பிடிக் கருவிகள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது; அதாவது அரசாங்க உதவி மானியத் திட்டத்தின் கீழ் (35% மானியத் திட்டம்) வங்கியின் ஊடாகக் கடன் வசதி பெற்றுக்கொள்ளத் தீவிர நடவடிக்கையில் இறங்கி வெற்றி கண்டுள்ளது. இத்திட்டத்தில் சங்கம் தன்னுடைய பூரணத்துவமான உழைப்போடு 12 வங்கி முற்பணத்தையும் (2500/- ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும்) அங்கத்தவர்களுக்கு வட்டியில்லாக் கடனுகக் கொடுத்துதவுகிறது.

(ஆ) காணி, கொள்வனவு :

சங்கம் தனது காரியாலயம் ஸ்தாபிப்பதற்காக ஒரு காணியை விலைக்கு வாங்கி வேலியும் சுற்றவரச் சிரமதான மூலம் அடைத்து வைத்துள்ளது.

(இ) மெதடிஸ்த ஆலயம் நிர்மாணிப்பு:

கல்லாறு மெதடிஸ்த திருச்சபை ஆலயம் சூருவளியின்போது முற்றுகச் சேதமடைந்தது. அதைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக மெதடிஸ்த திருச்சபை எடுக்கும் நடவடிக்கைகளில் தன்னுடைய நியாயபூர்வமான ஒத்துழைப்பை நல்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஈ) வீடமைப்புத் திட்டங்கள் :

சூருவளியினுல் பாதிக்கப்பட்ட சங்க அங்கத்தவர்களும் சங்கம் தன்னுல் முடிந்தளவில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. கல்லாறு மெதடிஸ்த திருச்சபை உட்படப் பல பொது ஸ்தாபனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது. அவை வெற்றியளிக்கும் பட்சத்தில் நடவடிக்கையில் ஈடுபடும். அதற்காகச் சங்க அங்கத்தவர்களின் வீடிழந்தோர் புள்ளி விபரத்தைச் சேகரித்து வைத்துள்ளது.

(உ) சங்கக் காரியாலயக் கட்டிடம் :

சங்கத்திற்கான சகல வசதிகளையும் கொண்ட ஒரு காரியாலயத்தைச் சங்கக் காணியில் கட்டுவதற்காகப் பொது ஸ்தாபனங்களின் உதவியைச் சங்கம் நாடியுள்ளது. குறிப்பாகச் சங்க அங்கத்தவர்கள் யாபேரும் கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பின் அங்கத்தவர்கள் ஆனபடியினுல் அதன் உதவியை வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

(ஊ) மீன்பிடித் துறைமுகம் :

சங்க அங்கத்தவர்களின் பெரும்பான்மையோர் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் செய்வதனுல் கல்லாறு கடல், பாரிய வள்ளங்களைக் கொண்டு நவீன மீன்பிடியில் ஈடுபடச் சாத்தியமற்றதாகவுள்ளது. எனவே கல்லாற்றின் இயற்கைக் கடல், கடல்நீர் ஏரித் தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு ஒரு மீன்பிடித் துறைமுகத்தைக் கல்லாற்றில் அமைப்பதற்கு அரசாங்கத்தினதும், பொது ஸ்தாபனங்களினதும் உதவியை நாடிச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதைக் கண்டிப்பாக மீன்பிடியில் ஊக்கம் கொண்ட அரசாங்கமும் பொது ஸ்தாபனங்களும் உதவுவார்கள் என்று சங்கம் நம்புகின்றது.

### முடிவுரை :

தற்பொழுது சங்கப் பதிவிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வெற்றியும் காணப்பட்டுள்ளது. சங்கம் தனது அயராத உழைப்பினுலும் அதன் திறமையான தலைவரின் செயல் ஊக்கத்தாலும் அதன் தற்போதைய நிர்வாகஸ்தர்களின் கடின உழைப்பாலும்


(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## ஊழியர் குடும்பத்திற்கு பிரியாவிடை

சென்ற புதன்கிழமை (30-4-80) ஊழியரும் மனைவியும் வண. S. T. ஆசீர்வாதம் அவர்கட்கும் திருமதி ஆசீர்வாதம் அவர்கட்கும் பிரியாவிடை நல்கினர். இவ்வைபவம் மானிப்பாய் திருச்சபை மண்டபத்தில் நடைபெற்றது முதலில் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தவர்கள் அனைவருக்கும் தேனீர் உபசரணை நடைபெற்றது.

பிரியாவிடைக்கூட்டம் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. வண. N. W. G. சுகுணராஜா ஆரம்ப ஜெபத்தினைச் செய்தனர். வண. K. S. ஜெயசிங்கம் தமது பாராட்டுரையில் வண. S. T. ஆசீர்வாதம் பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவ குடும்பத்திலே தோன்றியவரென்றும், பெற்றோரின் பக்தி வைராக்கியமே திரு. ஆசீர்வாதத்தின் பயனுள்ள வாழ்விற்கு கால்கோளாக அமைந்தது என்று கூறினர். யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் வண. S. T. ஆசீர்வாதம் அவர்கள் ஒரு மாணவ தலைவனாகவும் கண்டிப்பும் நீதியும் நிறைந்த வாலிபனாகவும் காணப்பட்டார் என்றும், யாழ்ப்பாணக் கல்லூரி Y. M. C. A. இன் பக்தி முயற்சிக் குழுவின் ஸ்தாபகர்களில் ஒருவராக விளங்கியவர் என்றும் குறிப்பிட்டார். வண. K. S. ஜெயசிங்கம் தாம் ஊழியர் பணியை ஆரம்பித்தபொழுது மகாகனம் S. குலேந்திரனுக்கு உதவியாளனாக ஒருவருடம் ஏழாலையில் சேவை செய்தாரென்றும். மறுவருடம் உடுவிலில் வண. S. T. ஆசீர்வாதம் அவர்கட்கு உதவியாளனாகப் பணி புரிந்தாரென்றும் குறிப்பிட்டு இவ்விரு காலப்பகுதியும் தமது ஊழியத்திற்கு மிக அவசியமான பயிற்சியை அளித்தது என்றும் தெரிவித்தார். வண. S. T. ஆசீர்வாதம் தமது சபையின் சேவைகளை நன்குணர்ந்திருந்தார், 49 வருடகால ஊழியத்தில் 10 வருடகாலம் சுவிசேட வேலைக்குப் பொறுப்பாய் இருந்தார். ஆனால், உண்மையில் 49 வருடகாலமுமே சுவிசேட வேலையைச் செய்தார் என்பதே பொருத்தமானதாகும் என்றும் குறிப்பிட்டார். சுவிசேஷ வாஞ்சை அவருடைய சபை ஊழியத்தில் மேலோங்கி நின்றது என்று குறிப்பிட்டார். வண. S. T. ஆசீர்வாதம் ஒரு உண்மைக் கிறிஸ்தவன். இறைவனின் பணிக்காக தன்னை அர்ப்பணித்த தொண்டன் என்றும் தொகுத்துரைத்தார்.

திருமதி சாம் தம்பு, திருமதி ஆசீர்வாதம் அவர்களின் சேவையை வியந்து போற்றினர். ஞானியக்கா இலங்கையிலுள்ள சகல கிறிஸ்தவ மக்களினாலும் நன்கு அறியப்பட்டவர். ஒரு ஊழியனின் மனைவி என்ற வகையில் எல்லாருக்கும் ஆலோசனையும் ஒத்தாசையும் வழங்கியவர். ஒரு ஆசிரியையாகவும் சமயக் கல்விக் குழுவின் இயக்குனராகவும் தமது பணியைச் சிறப்புறச் செய்தவர், தாம் பணிபுரிந்த ஒவ்வொரு சபையிலும் வண. ஆசீர்வாதம் அவர்களும், திருமதி ஆசீர்வாதம் அவர்களும் ஒரு சுப காரியத்தை செய்யாமல் போகவில்லை. அவர்கள் ஒரு குடும்பத்தைக் கட்டியெழுப்புவார்கள். அல்லது ஒரு சபை மண்டபத்தைக் கட்டியெழுப்புவார்கள்.

இவ்வாறு திருமதி சாம் தம்பு தமது உரையில் கூறினர்

திருமதி ஆசீர்வாதம் தமது பதிலுரையில் வாலிபப் பெண்களை நான் எப்பொழுதும் ஒரு ஊழியனைத் திருமணம் செய்யும்படி கேட்டுக்கொள்வதுண்டு. ஏனெனில் எத்தனை கஷ்டங்கள் நேரிட்டாலும் ஒரு ஊழியனின் மனைவியாகவிருப்பது பெரும் சலாக்கியம். நாம் இளைப்பாறினாலும் நமது பணி இன்னும் முடிவுறவில்லை. எங்கிருந்தாலும் எந்த நிலபரத்திலிருந்தாலும் இறைவனின் பணியைச் செய்வோம் என்று குறிப்பிட்டார். வண S. T. ஆசீர்வாதம் தமது பதிலுரையில் தாம் ஊழியத்திற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டமைக்கு தமது பெற்றோரும் ஏனைய கிறிஸ்தவ பெரியோர்களுமே காரணமென்றார். தமது சொந்த பலத்தினால் அல்ல தம்மை அழைத்தவரின் பலத்தினாலேயே தாம் வாழ்நாள் எல்லாம் இறைபணி செய்ய முயற்சிப்பேன் என்றார்.

மகாகனம் D. J. அம்பலவாணர் 49 வருடகால ஊழியம் மிக நீண்டது. அதற்காக இறைவனைப் போற்ற வேண்டும். 1931-ம் ஆண்டிலே மகாகனம் S. குலேந்திரன், வண. S. செல்வரத்தினம், வண. S. T. ஆசீர்வாதம் ஆகியோர் ஊழியர்களாகப் பணி புரிய ஆரம்பித்தனர். இவர்களே நமது ஆதீனத்தில் முதன்முதலாக BD பட்டம் பெற்று பணியை ஆரம்பித்த ஊழியர்கள். ஆசீர்வாதம் போதகர் குடும்பம் எல்லாச் சிறப்புக்களும் வாய்ந்த ஊழியர் குடும்பம். ஊழியர் மனைவி உத்தியோகம் பார்க்கக் கூடாது என்ற கருத்திற்கு முழுமுற்றான எதிர்வாதமாக திருமதி ஆசீர்வாதம் விளங்குகின்றார். ஏனெனில் அவர் சபைக் கடமைகளையும் ஆசிரிய உத்தியோகத்தையும் திறமையாகச் ஒன்றிற்கொன்று அனுசரணையாகச் செய்தவர் என்றார்,

ஊழியர் சங்கத்தின் சார்பில் வண. S. T. ஆசீர்வாதம் அவர்களுக்கும் திருமதி ஆசீர்வாதம் அவர்களுக்கும் ஒரு அன்பளிப்பு வழங்கப்பட்டது.

மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்களின் ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் கூட்டம் முடிவுற்றது. வண. S. T. ஆசீர்வாதம் அவர்களும் திருமதி ஆசீர்வாதம் அவர்களும் மே மாதம் முதலாந் திகதி கொழும்பிற்குப் புறப்பட்டனர். கொழும்பில் தமது மகன் பிரியன் ஆசீர்வாதம் வீட்டில் சிறிது நாட்கள் தங்கியிருந்துவிட்டு, பிறதேசங்களிலுள்ள தமது மற்றைய மக்களைச் சந்திக்கப் புறப்படவிருக்கின்றனர்.

---

### கல்லாறு மினப்பிடி .......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திறம்பட செயல்பட்டு ஒன்றரை ஆண்டுகளாக அதன் வளர்ச்சிப் பாதையில் வீறுநடைபோட்டுச் செல்லுகிறது

மிக விரைவில் தனது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாட இருக்கின்றது. சங்க ஸ்தாபிதத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் தார்மீக ஆதரவையும், ஒத்துழைப்பையும், நல்கிய மெதடிஸ்த திருச்சபைக்கும், ஏனைய சங்க வளர்ச்சிக்காக ஆதரவு நல்கிய ஸ்தாபனங்களுக்கும் பெரியோர்களுக்கும் சங்கம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

## ஆசியா ஞாயிறு

### கோட்டை ஆலயம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண
கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின்
ஆதரவில்

ஆசியா ஞாயிறு

ஐக்கிய திருவிருந்து ஆராதனையாக
மே மாதம் 18-ம் திகதி ஞாயிறு
மாலை 5-00 மணிக்கு நடைபெறும்.

அருளுரை :
வண. S. வெஸ்லி அரியராஜா.

யாவரும் அன்பாக
அழைக்கப்படுகின்றனர்.

வண. ஜோ. சர்வானந்தன்,
செயலாளர்,
யா. கி. ஐ. ச.

---

## "பலதும் பத்தும்"

பற்பல மார்க்கங்களிலிருந்தும் பிரதிஸ்தர் சேர்ந்து கூடிய ஓர் மகா ஆலோசனைக் கூட்டத்தில் ஒருவர் கட்டுக் கதையாய் ஓர் கதை சொன்னார். ஆதிப்பெற்றார் பாவஞ் செய்தபோது ஓர் தேவதூதன் போய் ஏதேனில் கதவை உடைத்து அவர்களை வெளியே துரத்தினன். கதவின் உடைந்த துண்டுகள் பூமி எங்கும் பரவின. பரவப்பட்ட துண்டுகள் அங்கங்கே பிரகாசமுள்ள இரத்தினங்களாய் விளங்கின. அந்த இரத்தினங்கள் எல்லாருக்குமல்ல சத்தியவந்தரான மனிதருக்கே தென்பட்டன. அவர்கள் அதை அங்கங்கே எடுத்துப் பேணி வைத்திருந்தனர். காலங்கள் கடந்து குறித்த காலம் வந்தபோது தூதர் போய் இச் சத்தியவான்களிடம் இருந்த இரத்தினங்களைச் சேர்த்து அவைகளைக் கொண்டு ஓர் Gate செய்வித்து அதை ஏதேனில் போட்டு எல்லாச் சாதியாரையும் அதன் வழியாய்ப் பரதீசுக்குள் செல்லும்படி சொன்னதாய்ச் சொல்லப்பட்ட கதை தீமை, மீட்பு. வழி என்பவைகளை வெளிப்படுத்தும் ஒன்றே.

— பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

* * *

கிறிஸ்த சீவியம் ஒரு ரோட்டுப் போலவும் நியாயப் பிரமாணம் ரோட்டின் இருமருங்கும் உள்ள வேலி போலவும் இருக்கிறது. ரோட்டில் நேராய் நடப்பவனுக்கும் வேலிக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அவன் ரோட்டை விட்டு விலகி நடக்கும்

## மறுமைப் பிரவேசம்

### லூதர் செல்வராஜா

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வட பிராந்திய இயக்குனரும், சங்கானை பல நோக்கு சங்கத்தின் உப தலைவரும் தெற்கு ஏழாலைத் திருச்சபையைச் சேர்ந்தவருமான திரு. லூதர் ஜேம்ஸ் செல்வராஜா தமது ஐம்பதாவது வயதில் அகால மரணமடைந்தார். சென்ற திங்கட்கிழமை மாலை (28-4-80) டெனிஸ் சுற்றுப் போட்டியில் கலந்து விளையாடிய செல்வராஜா அவர்கள், போட்டிகள் முடிந்தபின் ஏற்பட்ட மாரடைப்பினால் இயற்கையெய்தினர். அன்னாரின் பிரேத சேம ஆராதனை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒழுங்கையிலுள்ள அவர் இல்லத்தில் புதன்கிழமை நடைபெற்றது. வண. K. S. ஜெயசிங்கம் அவர்கள், வண. S. T. ஆசீர்வாதம், வண. சாம் அல்பிரட் ஆகியோரின் உதவியுடன் ஆராதனையை நடாத்தினர். மகாகனம் S. குலேந்திரன் திரு. செல்வராஜாவின் நற்பண்புகளையும் ஆற்றல்களையும் எடுத்துக் கூறினார். மகாகனம் D. J. அம்பலவாணர் அருளுரை வழங்கினார்.

நல்லடக்கம் தெற்கு ஏழாலை சேமக்காலையில் நடைபெற்றது. வண. S. T. ஆசீர்வாதம், வண. N. W. G. சுகுணராஜாவின் உதவியுடன் இவ்வாராதனையை நடாத்தினர்.

* * *

### பிரான்சிஸ் அருளப்பு

உடுவில் திருச்சபையைச் சேர்ந்த மல்வத்தின் அங்கத்தவர் பிரான்சிஸ் அருளப்பு 24-4-80 வியாழக்கிழமை மறுமைக்குள் பிரவேசித்தனர். மல்வத்தில் தென்னிந்திய திருச்சபை நற்செய்திப் பணியை ஆரம்பித்தவுடன் முதன்முதலாகக் கிறிஸ்தவரானவர் பிரான்சிஸ் அருளப்புவேயாகும். அன்னாரின் பிரேத சேம ஆராதனையும் நல்லடக்க ஆராதனையும் வண. N. W. G. சுகுணராஜா அவர்களினாலே 25-4-80 வெள்ளிக்கிழமை நடாத்தப்பட்டது.

---

போது வேலியில் மோதுவான். அல்லது வேலி அவனை மோதும்.

— ஓர் அறிவாளி

*(Rev. E. K. Y. Notes.)*


## மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை

திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர்,
பரிஸ், லண்டன். துபாய், சவூதி அரேபியா, கனடா
ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல

மற்றும்

பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

**மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,**

தபால்பெட்டி இல : 92

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: **8154**

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!

*EDITORIAL*

## Higher Education in Sri Lanka

Through a Press release (CDN : 1-5-80), the Vice Chancellor of the Jaffna University has informed the general public that the University of Jaffna has no connection whatsoever with any private institution, supposed to be conducting courses for the External Examinations of some universities in Sri Lanka.

The notification appears to be a sequel to 'a private tutory' in Jaffna which has through newspaper "given the impression" that it is conducting courses for external degrees "on behalf of" and "in collaboration with" the University of Jaffna.

We are *not* at the moment concerned with the question of "private tutories" and their claims to become "open universities", conducting courses for external examinations.

Our concern in this column, is with the whole question of the members of the academic staff in the Universities of Sri Lanka (Jaffna is only one of the universities) being unofficial "visiting lecturers" at "private tutories" and places akin to "private tutories" spread all over the country.

It may be contended that if specialists in the medical service are allowed "channelled practice", there is no reason why specialists in the educational service be shut out from that privilege.

But it is not difficult to see the flaw in the analogy. University Education in Sri Lanka continues to be determined by a highly competitive process, the like of which, perhaps, does not exist in other parts of the world. Only 30 per cent of candidates in Sri Lanka can enter the university on a merit criteria.

The Controlling Examiners and the whole staff of Chief Marking Examiners for the G. C. E. (A/L) have to be drawn, by and large from our universities. Any association of the academic staff with any 'private tutories', who now prepare both school students and private students for the university qualifying examination (the G. C. E. Advanced Level) amounts to a travesty of justice. "Justice", as the familiar dictum goes, "must not merely be done but must *manifestly* be done".

The large number of distinctions scored by candidates at the A. L. examinations — a phenomenon not very common a decade or two ago — may be attributed to many factors.

It may be attributed to the ease with which the students now comprehend their subjects in their own mother tongue. It may be attributed to an examination-oriented, notes-ridden system of imparting instruction through intensive coaching lessons at the expense of almost everything else in education. It may also be the result of an overwhelming enthusiasm displayed by students and parents alike to reach their goals.

But our only hope is that it will *not* be attributed to students of certain 'private tutories' or students belonging to certain "private groups" who have access to the correct "channels" of private practice in higher education, reported to be in vogue in our country.

All the same, it is too naive, perhaps, to regard *all* private tutories as engaging in a kind of nefarious educational "racket". In the last analysis, they only reflect the biting mood of the youth of the country, to take into their hands the shaping of their own destiny.

Most of these 'private tutories' are run, we now know, by young people who are themselves victims or sympathisers of the victims of an iniquitous system of university admissions which plays undue emphasis on "grades" for students *resident in certain educational regions*. It is these young people, who, perhaps, enlist the support of younger members of the university staff to help them to obtain their 'grades' even at the third shy.

The solution to the whole problem lies not in curbing 'private tutories' but in curbing the reasons for their existence and proliferation.

The entire policy of Higher Education in Sri Lanka, should in our view, be revamped, so as to lay the emphasis *not on examination grades* but *on grades of general attainments* of a student in school, which should include areas of activity where his or her special interests lie. In this context, it is sad to note to what extent our standards in sports, in drama, and in elocution, have deteriorated in our schools progressively for the last two decades.

This is the only solution we can think of, to lift Education especially Higher Education out of the abyss into which it has fallen in Sri Lanka.

Let it not be said of us, as planners and policy makers in Education, that we are more firmly convinced that our opinions are "precious" than that they are "true".

## Chairman's Address at Opening of Chelvanayakam Monument

On this solemn 3rd anniversary of the passing away of the Thanthai, and our dedicating this Samadhi over his ashes and this 80 - ft. commemorative pillar, we recall how with prophetic insight and steadfast purpose, he took his people to the gates of liberty. His historic achievement was to have implanted in his people a deep national consciousness, the consciousness of their identity as a people, the territorial identity of their homeland, and their right to self-determination. What, however, made the march invincible was that it was under the banner of Truth and Ahimsa. Like the Mahatma, he taught us that Swaraj is never a gift from one people to another, it is a people's own self-expression; Or, in the words of Martin Luther King, freedom is never voluntarily given by the oppressor; it must be won by the oppressed. We thank God for giving us a leader in Samuel James Velupillai CHELVANAYAKAM for this nation-making achievement.

But, Thanthai Chelva has left us a stupendous task; he has called us to turn from nation-making to the equally important task of nation-building. You will recall how Gandhiji urged a two-fold struggle — one against the dominant British power, the other to build a new society from within, and that a Sarvodaya social order based on non-violence. At this critical turning point in the history of the Tamils of Sri Lanka, they would do well to examine the working of their institutions, their local self-governing bodies, their co-operatives, their business houses, the trade unions, the educational structures and goals, and not least, how their public servants serve the people. Having reached the threshold in nation-making, let us not turn back in this other task of building a great nation, also on Truth and Ahimsa.

Let this SAMADHI be a prayer corner in our Northern Capital, where our people can come singly or in groups, to get a clear vision of the future and to strengthen their spirits. Let our leaders and our teachers, our poets and writers and scholars come here when they need to seek values, purpose and guidance.

**K. Nesiah**

## Mr. K. Nesiah's Address from the Chair at the Chelvanayakam Memorial Lecture by Rev. Fr. Xavier S. Thani Nayagam: Research in Tamil Studies — Retrospect and Prospect

Real life is meeting, it has been said with regard to the University Community. It has been one of the happy privileges of my life to have met and closely associated with Fr. Thani Nayagam since we worked together years ago at the University. That privilege continues to this day. I am so thankful.

If Thanthai Chelva's key role was in nation-making, in taking the Tamils of Lanka to the gates of liberty, in implanting deep political consciousness in them during that 30 - year march, Fr. Thani Nayagam is helping us at the next stage of the march, that is in nation-building, in building the political and cultural personality of the new nation. For, the French Canadians are not Frenchmen in Canada, but French Canadians; the German Swiss are not Germans nor are the English or the 25 other nationalities in the U. S. any other than Americans. We are all Eelam Tamils now.

Indeed our intellectuals have all an obligation to provide a pervasive nation-wide intellectual environment so central to national growth today. What we should look for is not a revival of the past, but as Dr. Radhakrishnan and Sri Aurobindo urged, a many sided renewal. Yes, continuity, but continuity - through - change. Hence the place of research as instrument of renewal.

The re-writing of Lanka's history, so as to eliminate the many myths to be found in even the University History of Ceylon, is an urgent task of research. "Burn the books which teach hatred, burn them all" cried Anatole France at the end of World War I. Since then the history of many countries have been re-written, often as a part of world history. We too would do well to rewrite both the history of Lanka and the history of the Tamils here, so as to bring the cultural message and meaning behind it. In fact, writing the history of the Tamils of Lanka could fit in well with a world history approach.

We need hundreds of books and scores of periodicals in Tamil on modern subjects, in the natural and social sciences, in economics and public affairs, in communication studies and to put across the new concepts of education. English-Tamil dictionaries and Tamil - other language dictionaries and elaborate dictionaries of technical terms will be needed. A University Press connected with the University of Jaffna can alone fill this vacuum. Will the University of Jaffna rise to the height of her opportunity ?

I now invite the Revd. Fr. Xavier S. Thani Nayagam to deliver his second lecture : Research in Tamil Studies — Retrospect and Prospect.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB / 8920 / 78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 9th May, 1980.